OS 112/2023

பி.வா.சா.1 பிச்சை த/பெ முருகேசன்

நாள் 19.08.2025

**குறுக்கு விசாரணை**

1. வாதி எனக்கு என்ன வேண்டும் என்றால் எனக்கு சித்தப்பா மகன். தம்பி ஆவார். நான் அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு மற்றும் எனது எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது அதன் விவரம் எனக்கு தெரியும். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். நடப்பா என்ற சின்னகுழந்தை எனக்கு என்ன வேண்டும் என்றால் சின்ன தாத்தா ஆவார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள சர்வே எண்கள் பட்டா எண்.339 எனது சின்ன தாத்தா பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு 2வது அயிட்டமான சர்வே எண்.283/5ல் 70சென்டை பொறுத்து மட்டும் தான் எனக்கு ஆட்சேபனை இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு 3 சொத்துகளுக்கும் எனக்கு ஆட்சேபனை இருக்கின்றது. எனது எதிர்வழக்குரையில் வழக்கு சொத்துகள் 3க்கும் எனக்கு ஆட்சேபனை இருப்பதாக சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

2. எனது பிரமாண வாக்குமூலத்தில் 2 பத்தியில் தாவா 1 அயிட்ட சொத்தை தவிர்த்து மற்ற சொத்திற்கும் எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொல்லியிருப்பது சரியான விவரமா என்றால் சரியானது தான். வா.சா.ஆ.1 உயில் ஆவணம் வாதிக்கு பெயருக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் உயில் அவ்வாறு தான் உள்ளது. நடப்பா என்ற சின்ன குழந்தை 14.12.2002ல் இறந்துவிட்டார் என்றாலும் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அந்த இறப்பு சான்று தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 நான் அனுப்பிய பதில் அறிவிப்பு தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6ல் 2வது பக்கத்தில் உயில் எழுதி வைத்திருப்பதாக விவரம் சொல்லியிருக்கிறேன் யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் எனது தாத்தா எனது அம்மாவிற்கு எழுதி கொடுத்துள்ளார் அதை தான் சொல்லியிருக்கிறேன். பதில் அறிவிப்பில் அந்த உயில் எந்த தேதியில் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் சொல்லியிருக்கிறேனா என்றால் 14.12.2002ல் எழுதி கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன்.

3. 14.12.2002 தேதியிட்ட உயில் ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் மேலே சொன்னது போல் எனது அம்மா பெயரில் உயில் எழுதப்படவில்லை என்றாலும் அதனால் தான் அந்த உயிலை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்தான சர்வே எண்.283/4 சொத்து எனது தாயாரான சீத்தாம்மாளுக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் நான் மேலே சொன்ன உயில் மூலம் கிடைத்தது. எனது தாயார் சீத்தாம்மாளுக்கும் வாதியின் தாயார் வேதவள்ளிக்கும் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவா 1வது அயிட்ட சொத்து எனது தாயாருக்கு ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 ஆவணம் அடமானப்பத்திரம் மற்றும் அடமானம் பைசல் செய்ததற்கான ரசீது பி.வா.சா.ஆ.6 என்றால் சரிதான். எனது பதில் உரையில் 12வது பத்தியில் 19.09.1988ல் வாதியின் தாயார் வேதவள்ளிக்கும் எனது தாயார் சீத்தாம்மாள்

என்பவருக்கும் குடும்ப பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

4. எனது எதிர்வழக்குரையில் 16வது பத்தியில் சொல்லியுள்ள 07.10.2013 அன்று அப்பாசாமி என்பவருக்கு மேற்படி சொத்தை விற்பனை செய்ய உடன்படிக்கை மற்றும் 29.11.2013ல் தர்மன் வகையறா அவர்கள் அடமானம் செய்யப்பட்டதா விவரம் சொல்லியிருக்கிறேன் அந்த ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. தர்மனுக்கு அடமானம் போட்டதாக சொல்லப்பட்டுள்ள ஆவணம் வழக்கு சொத்துகளுக்கு போடப்படவில்லை என்றால் வழக்கு சொத்துகளுக்கு தான் போடப்பட்டுள்ளது. வழக்கு சொத்துகளுக்கும் தர்மன் என்வருக்கு போடப்பட்ட அடமானத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சம்மந்தம் உள்ளது. வழக்கு சொத்தின் பொறுத்து தர்மனுக்கு அடமானம் போடவில்லை என்பதால் தான் நீதிமன்றத்தில் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வில்லங்கச்சான்றில் வரிசை எண்.9ல் உள்ள 29.11.2013 தேதியிட்ட அடமான ஆவணத்திற்கான சொத்தில் சர்வே எண்.283/7எ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.(அந்த வில்லங்கச்சான்று **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது).

5. 07.10.2013 தேதியிட்ட கிரைய உடன்படிக்கையின் பேரில் அப்பாசாமி வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. 14.08.2013 தேதியிட்ட அடமானப்பத்திரம் மற்றும் 07.10.2013 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஆகியவற்றை நான் வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துகள் வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றாலும் தாவா 1வது அயிட்ட சொத்தை நான் அனுபவம் செய்வதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் சீத்தாம்மாளுக்கு உரிமை இல்லாத வழக்கு 1வது அயிட்ட சொத்தை பொறுத்து பி.வா.சா.ஆ.2 மூலம் எனக்கு எழுதி வைக்க உரிமை இல்லை என்றாலும் எனக்கு உரிமை ஏதும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அசல் வீட்டில் உள்ளது.

6. வழக்கு 1வது அயிட்ட சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றாலும் உரிமையில்லாத நபரிடம் இருந்து ஆவணம் எழுதி பெற்று தவறான எதிர்வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தின்படி தாவா 1வது அயிட்ட சொத்து வாதிக்கு உரிமையானது என்றாலும் நான் தவறான உரிமைமூலம் கோருகிறேன் என்றாலும் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.